

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற "காவலர் நாள் விழா 2025" – இல், காவலர் நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற காவலர் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க.வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# அனைத்துத் துறைப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது!

காஞ்சிபுரம், செப். 12-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 9.9.2025 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான மகளிர் விடியல் பயணத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண், தமிழ்புதல்வன், முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், குடிநீர் திட்டப் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது, ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாவட்டத்தில் நடைபெறுகின்ற அரசு திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை நாம் நடத்தியிருக்கின்றோம். நம்முடைய அரசு அமைந்த பிறகு இந்த நான்கரை ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய நலத்திட்டங்களை தந்திருக்கின்றார்கள். அந்த திட்டப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்து இன்றைக்கு நாம் விவாதித்திருக்கின்றோம். அதேபோல் இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்களுடன் நான் சந்தித்து உரையாடிவிட்டு தான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கின்றேன்.

அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது, சுற்றுலா மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அதுதவிர, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், பொறுப்பு அமைச்சர், மக்கள் பிரதிநிதிகளுடன் கோரிக்கைகளை பெற்று, அவற்றையும் ஆய்வு செய்த பிறகே இந்த கூட்டத்திற்கு வருகை தந்துள்ளேன்.

சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே உள்ள நிலையில், முக்கியமான திட்டங்க ளின் தற்போதைய நிலை குறித்து மட்டுமே இன்றைக்கு நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அனைத்து திட்டங்களையும் காலம் தாழ்த்தாமல் திட்டத்திற்கான குறிப்பிட்ட கால வரையரைக்குள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு, முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு திட்டங்களை தீட்டினாலும், அவற்றை மக்களிடத்தில் கொண்டு சென்று மக்கள் பயனடைய வேண்டும் என்றால் வந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்கள் நீங்கள் தான் முக்கிய பங்காற்றி இருக்கின்றீர்கள். எனவே, இத்திட்டங்களை தாமதமின்றி செயல்படுத்தி, இந்த அரசுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நற்பெயரை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம் என்று துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம். பி.எழிலரசன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மரு. ச. உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், மாநகராட்சி மேயர் திருமதி. எம்.மகாலட்சுமி யுவராஜ் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோட்டூர் வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் ராயர் பெர்னாண்டோ அவர்களின் இல்ல திருமண நிகழ்வில் மணமக்கள் ஆல்வின்,அமல உற்பவ செலினா ஆகியோரை ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில செயலாளர் முனைவர் நா.சண்முகநாதன், தலைவர் பெ.இரா.இரவி, மற்றும் அரசியல் பிரமுகர்கள், ஆசிரிய பெருமக்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் வாழ்த்தினர். ஆசிரியர் மன்ற மாநில செயற்குழு விக்டர் பெர்னாண்டோ, அருள் பெலிக்ஸ், மாவட்ட தலைவர் சண்முகவடிவேல் ஆகியோர் உடன் உள்ளனர்.

# இதுதான் திராவிடப் பொருளாதாரம்!



தொழிலாளர்கள் வசதியான வாழ்க்கை பெற்று அப்படியே தொழிலாளர்களாகவே இருக்க வேண்டும் என்று நினைப்பது கம்யூனிசம். முதலாளிகள் மிக மிக வசதியான வாழ்க்கையை பெற்று அப்படியே அனுபவிக்க வேண்டும் என்பது முதலாளித்துவம்.

**ஆனால் தொழில் தொடங்குவதற்கும் தொழில் செய்வதற்கும் ஒரு இணக்கமான சூழல் உருவாக்கி, தொழிலாளர்களையும் நலமாக வைத்து, அதன் பின்னர் அந்த தொழிலாளிகள் தொழில் தொடங்க தேவையான கட்டமைப்பை செய்து கொடுத்து இருப்பது திராவிடம்.**

எத்தனை நாட்கள் தான் அவர்களை தொழிலாளியாகவே வைத்திருப்பீர்கள்? தொழிலாளியாக இருந்து வாழ்வில் வளம் பெற்று அடுத்து அவர்கள் முதலாளியாக வேண்டும் என்பதுதான் திராவிட பொருளாதாரம்.

தென்மாநிலங்களை எடுத்துக் கொள்ளுங்கள். கேரளாவில் திறமையான டெக்னீசியன்கள் இருப்பார்கள். அவர்கள் சரியான நேரத்திற்கு வருவார்கள், திறமையாக வேலை செய்வார்கள், சரியான ஊதியம் பெறுவார்கள். அதனுடன் அவர்கள் அப்படியே இருந்து விடுவார்கள்.

ஆந்திரா பகுதிகளில் சொல்லவே வேண்டாம். அங்கே ஒருவர் அங்கே இருக்கும் ஜாதி கட்டுமானத்தை மீறி எல்லாம் முதலாளியாக மாறுவது என்பது மிக கடினம். கடைசிவரை தொழிலாளியாகவே இருப்பார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான் டெக்னீசியன்களாக இருந்தாலும் சரி; ஹோட்டல் தொழில் செய்பவராக இருந்தாலும் சரி; வேறு எந்த மாதிரியான தொழிலிலும் உழைத்து திறமை கண்டவர்கள் முதலாளியாக மாற முடியும். அடையாறு ஆனந்த பவன் ஹோட்டல் அதிபரின் பேட்டியை இதற்கு ஒரு உதாரணமாக கூட எடுத்துக் கொள்ளலாம். அவர் சொல்லி இருப்பார் பெரியார் வந்த பின்னர் தான் எல்லா வகுப்பினரும் ஹோட்டல் தொழிலில் இறங்க முடிந்தது என்று. இதுபோக. கண் முன்னே ஆயிரக் கணக்கான உதாரணங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

**அம்பத்தூர் தொழில் பேட்டை துவங்கி ஓசூர், கோயமுத்தூர், கப்பலூர் சிட்கோ வரை ஏராளமான தொழிற்பேட்டைகளில் வேலை விஷயமாக சென்றிருக்கிறேன். அங்கே எல்லாம் தொழிலாளியாக இருந்து முதலாளியாக மாறிய ஏராளமான தொழில் முனைவோர்களை பார்த்திருக்கிறேன். அதற்கான பிளாட்பார்மை அமைத்துக் கொடுத்தது, இதுபோன்ற தொழில் பேட்டைகளை உருவாக்கிய கலைஞர் அவர்களின் திமுக தான். இதைத்தான் திராவிட பொருளாதாரம் என்கிறோம்.**

தொழிலாளியாக இருக்கும் வரை அவனுக்கு தேவையான வசதிகளை செய்து கொடு. அடுத்த கட்டமாக அவனை தொழில் முனைவோர் ஆக்கி, முதலாளி ஆக்கு என்பதுதான் திராவிட பொருளாதாரம். தொழில் செய்ய வருபவர்களை எல்லாம் அடித்து துரத்தி விட்டு கஞ்சித் தொட்டி திறப்பதை விட, அவர்கள் மூலம் வளர்ந்து நாம் அடுத்த கட்ட வளர்ச்சியை பெறுவதில் தான் கவனமாக இருக்க வேண்டும்.

அதைத்தான் திராவிட பொருளாதாரம் சொல்கிறது. தற்போது தமிழ்நாட்டிற்கு திராவிட மாடல் முதல்வர் அவர்கள் கொண்டு வரும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எத்தனையோ சப் காண்ட்ராக்டர்கள் தேவை. அவர்களெல்லாம் வானத்தில் இருந்து குதித்தா வரப்போகிறார்கள்? எல்லாம் நம் மக்கள். இங்கே தொழிலாளர்களாக இருந்து தொழிலை கற்று அடுத்த நிலைக்கு முன்னேறியவர்கள். இன்று அவர்களும் ஒரு முதலாளிகள்.

**இதுதான் திராவிட பொருளாதாரம்.**

**பேராசிரியர் முரளிக்கண்ணன்**

### இலண்டன்வாழ் தமிழர்களிடமும் –

# பென்னிகுயிக் குடும்பத்தினரிடமும் முதல்வர் பேசியது நெகிழ வைத்தது!

## கேம்பர்லி தமிழர் – பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி அறிக்கை!

லண்டன், செப். 12-

லண்டன் வாழ் தமிழர்களிடமும் பென்னிகுயிக் குடும்பத்தினரிடமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளவளாவியது நெகிழ வைத்தது என்று கேம்பர்லீ தமிழர் பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கேம்பர்லி தமிழர் பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி அறிக்கை வருமாறு:-

கலாச்சார இணைப்புத் திட்டம் என்பது இருநாடுகளைச் சேர்ந்த முக்கிய நகரங்கள் ஒருங்கிணைக்கப்படும். இதன்மூலம் கல்வி, சுற்றுலா, வர்த்தகம் உட்பட பல்வேறு துறைகள் சார்ந்த சிறப்பம்சங்களை இருநகரங்களும் பரிமாறிக் கொள்ளும். அதன்படி தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்கள் ஏற்கெனவே அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, மலேசியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள முக்கிய நகரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் நூற்றாண்டு காலம் தொடர்புள்ள கேம்பர்லீ மற்றும் மதுரை நகரங்களும் இத்திட்டத்தின்கீழ் இணைக்கப்பட உள்ளன.



தமிழர் பண்பாட்டை மதுரை நகரம் முழுமையாக பிரதிபலித்து வருகிறது. கோயில்களின் பாரம்பரிய விழாக்கள் ஆகியவற்றின் வழியாக மதுரை உலகம் முழுவதும் தமிழர் பண்பாட்டின் மையமாகப் போற்றப்படுகிறது. அதேபோல், கேம்பர்லீ நகரமும் கல்வி, வரலாறு, சமூக மேம்பாடு, சுற்றுலா ஆகிய துறைகளில் தனித்துவமாக விளங்குகிறது. இவ்விரு நகரங்களும் ஒருங்கிணைந்தால் பல்வேறு பலன்களை தமிழகம் பெறும்.

கேம்பர்லீ நகரத்தில் 6 பெரிய பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் மதுரை மாணவர்கள் இளைஞர் பரிமாற்றத்தில் கல்வி பயிலலாம். கீழடி உட்பட தொன்மங்கள் குறித்து ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்தலாம். மதுரையின் கோயில்கள், விழாக்கள், கைவினைப் பொருட்கள் மூலமாக நமது கலாச்சாரம் உலகளாவிய வரவேற்பை பெறும். புதிய தொழில் முதலீடுகள் வரும். சுற்றுலாவை மேம்படுத்துவதுடன் விமானப் போக்குவரத்தும் விரிவு செய்ய

இத்தகைய அம்சங்களை முன்வைத்து முதல்வர் ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம். இது சார்ந்து கேம்பர்லீ நகரம் அமைந்துள்ள சர்ரே மாகாணத்தின் மேயரும், கலாச்சார இணைப்பு திட்டத்தில் சேர சம்மதம் தெரிவித்து முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். அதையேற்று கடந்த வாரம் லண்டன் வந்திருந்தபோது இத்திட்டத்தை முன்னெடுப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார். இதன் மூலம் இருநகரங்களும் சிறந்த வளர்ச்சியை பெறும்.

**பென்னிகுயிக் குடும்பத்தினர்!**

லண்டனில் பென்னி குயிக் பேத்திகள் மேரி மற்றும் செர்லீ ஆகியோரிடம் முதல்வர் பேசினார். அப்போது, "தாங்கள் அவ்வப்போது தமிழகம் வந்துசெல்ல வேண்டும். அங்கு யாருமில்லை என நினைக்க வேண்டாம். தமிழகத்தில் உள்ள அனைவரின் இல்லமும் தங்களை வரவேற்கும். அதில் முதல் வீடாக எனது இல்லத்தை நினைத்துக் கொள்ளுங்கள். மேலும், ஏதேனும் உதவிகள் தேவை என்றாலும் நீங்கள் தயக்கப்படாமல் கேளுங்கள்" என்று முதல்வர் உரிமையுடன் பேசியுள்ளார்.

இதை கேட்டு மகிழ்ச்சியில் கண்கலங்கிய பென்னி குயிக் குடும்பத்தினர், நிச்சயம் தமிழகம் வருவதாகவும் உறுதி தெரிவித்தனர். பொங்கல் திருவிழா, ஜல்லிக்கட்டு மற்றும் மதுரை கேம்பர்லீ நகரங்கள் இணைப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கவும் அழைப்பு விடுத்தார். இதைக் கேட்டு நெகிழ்ந்த அந்த நாட்டின் பிரமுகர்கள் தமிழர்களின் நன்றியுணர்வு வியக்க வைப்பதுடன் பெருமைப்பட பேசினார் என்று பிரிட்டன் வாழ் தமிழர்கள் தெரிவித்தனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



காட்பாடி தெற்கு பகுதி,
வேலூர் மாவட்டம்.



சோளிங்கர் நகரம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



வந்தவாசி மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



க.பரமத்தி தெற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



பள்ளபாளையம் பேரூர்,
கோவை தெற்கு மாவட்டம்.



பட்டிவீரன்பட்டி பேரூர்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.